செ.வெ.எண்.56 நாள்:21.04.2017

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 76 பயனாளிகளுக்கு ரூ.4.16 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.04.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் 10 பயனாளிகளுக்கு மண்வள அடையாள அட்டைகளையும், கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் 4 நபர்களுக்கு நாட்டுக் கோழி பண்ணை அமைக்க தலா ரூ33,850 க்கான மணியத்தையும், உலர் தீவன அட்டை 50 நபர்களுக்கும், புல் தீவன கட்டு 10 நபர்களுக்கும் வனத்துறையின் சார்பில் காட்டு மாடு முட்டி உயிரிழந்த புளியங்குடியை சேர்ந்த பார்த்திமாள்பீபி என்பவரின் மகன் திரு.மீரான் மருதன்னன் அவர்களுக்கு நிவாரண உதவித் தொகை ரூ.2,75,000 க் கான காசோலையையும், பயிற்சேத உதவித் தொகை உத்து மலையை சேர்ந்த விவசாயி திரு.கணபதி தேவர் அவர்களுக்கு ரூ.5,7.00க்கான காசோலையும் என மொத்தம் 76 பயனாளிகளுக்கு ரூ.4.16 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட அட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும் நீடித்தநிலையான வேளாண்மை இயக்கம் குறித்த துண்டு பரசுரத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது: -

திருநெல்வேலி மாவட்டத்தில் இயல்பான மழையளவு 814.80 மி.மீ ஆகும் ஏப்ரல் மாதம் இயல்பான மழையளவு 59.8 மி.மீ ஆகும் 20.04.2016 வரை 15.50 மி.மீ மழை மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது. திருநெல்வேலி மாவட்ட அணைக்கட்டுகளிலும் நீர் இருப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. கடந்த ஆண்டு 20.04.2016 அன்று 5140.446. மி.க. அடி இருந்த நிலையில் இந்த ஆண்டு (20.04.2017) 1163.641 மி.க.அடி மட்டுமே உள்ளது.

விவசாயிகள் பயிற் சாகுபடிக்கு தேவையான விதை, உரம், உயிர் உரம் ஆகியவை போதிய அளவில் இருப்பு உள்ளது. மார்ச் 2017 மாதத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மொத்தம் 463 மனுக்கள் பெறப்பட்டது. இதில் வேளாண்மை சார்ந்த 193 மனுக்களுக்கும் பதில்கள் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெறப்பட்டு விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் மூலம் 100 க்கு மேற்பட்ட குளங்களும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் 40 குளங்களும், 796#நிறுவனத்தின் மூலம் 7 குளங்களும் தூர் வாரப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள மற்ற குளங்களும் படிப்படியாக தூர் வார நடவடிக்கை எடுக்கப்படும். நீடித்த நிலையான மானாவரி பயிற்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உளுந்து பயிற் சாகுபடி தொகுப்புகள் நமது பகுதியிலும்,

ஆலங்குளம், கடையநல்லூர், சங்கரன்கோவில் ஆகிய ஒன்றியங்களில் தலா ஒரு இடத்திலும், மேலநீலிததநல்லூர் ஒன்றியத்தில் இரண்டு பகுதிகளிலும் தலா 1000 ஏக்கர் மானாவரி பயிர் சாகுபடி தொகுப்புகள் அமைக்கப்படும். அனைத்து அணைகளும் தூர் வார நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கரம்பை மண் வேண்டி விண்ணப்பம் கொடுத்த அனைத்து விவசாயிகளுக்கு 80 யூனிட் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.32.26 கோடி நிவாரணத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. நிவாரணத் தொகை விபரங்கள் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களில் ஒட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படாத விவசாயிகளிடம் மனுக்கள் பெறப்பட்டு உடன் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீட்டு செய்த விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை மே முதல் வாரத்திற்க்குள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் கோரிக்கை மனுக்களுக்கு உடன் நடவடிக்கை மேற்கொண்டு உரிய அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கிட அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, வருவாய் கோட்டாட்சியர்கள் (தென்காசி) திரு.வெங்கடேஷ், (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, இணை இயக்குநர் வேளாண்மை திரு.கனகராஜ், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, கால்நடைபராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், வேளாண்மை அலுவலர் திரு.சங்கரநாராயணன் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி